# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 06 செவ்வாய்க்கிழமை (18-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 82


## புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய குற்றச்சாட்டு

# ஜனாதிபதி பிரேமதாஸா மீது

# சர்வதேச நீதிமன்றில் வழக்கு

## தாக்கல் செய்ய ஏற்பாடு

கொழும்பு, பெப்ரவரி. 18

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்ற குற்றச்சாட்டு உட்பட, ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்கள் குறித்து சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாக சிங்கள வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு எதிராக இலங்கைநீதி மன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்று இலங்கை அரசமைப்பு அவருக்குச் சட்டப் பாதுகாப்பு அளித்திருப்பதாலும்—

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குற்ற விசாரணைப் பிரேரணை மூலம் ஜனாதிபதி இழைத்த தவறு

[2 ஆம் பக்கம் பார்க்க]

## வளலாய் மோதலில் ஒருவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப். 18

வளலாய் பகுதியில் நேற்று அதிகாலை புலிகள் முன்னேறிச் சென்ற சமயம் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் பலத்த மோதல் இடம் பெற்றது. இந்த மோதலில் சுரேஷ் அல்லது தில்லை [அருளானந்தசாமி ஜெயசீலன், இன்பருட்டி] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

அவருக்கு விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்தியுள்ளனர். [உ-3-15]

## ஆஸ்பத்திரிப் பகுதியில் ஷெல்:

## பாதுகாப்பு அமைச்சிடம் செஞ்சிலுவையினர் முறையீடு

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பிரதேசத்தில் ஷெல் விழுந்தது குறித்தும்—

ஆஸ்பத்திரி கட்டடத்தில் 50 கலிபர் துப்பாக்கிச் சன்னங்கள் விழுந்தது குறித்தும்—

ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சிடம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு முறையிட்டுள்ளது.

நேற்று முன் தினம் அதிகாலை மண்டைதீவு மற்றும் காரைநகர் கடற்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் யாழ் நகரை நோக்கி ஷெல் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தினர் என்பது தெரிந்ததே.

இந்த விடயம் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு தனது கொழும்பு அலுவலகம் மூலம் பாதுகாப்பு அமைச்சிடம் முறையிட்டது.

துப்பாக்கி ரவைகள் ஆஸ்பத்திரி மேல்மாடிக் கட்டடங்களிலும் பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள சில தனியார் கட்டடங்களிலும் இருந்து மீட்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## வவுனியாவில் குண்டு வீச்சு! இரு பெண்கள் உயிரிழப்பு!!

வவுனியா விளக்கு வைத்த குளம் பகுதியில் நேற்றுக் காலை குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் இரு பெண்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் தங்கம்மா, திருமலையைச்சேர்ந்த ஏரம்பு பார்வதி ஆகிய இரு பெண்களே உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில் மற்றொருவர் காயமடைந்தார்.

இதனிடையில்—

நேற்று முன்தினம் மாலை வவுனியா மகிழங்குளம் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் இரு வீடுகள் சேதமடைந்தன; சில கால் நடைகள் பலியாகின. [உ-3]

## இம்மாத இறுதியில் இருந்து காங்கேசன் ஊடாக உணவு

யாழ்ப்பாணம், பெப். 18

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து வாகன அணி மூலம் குடாநாட்டுக்குள் உணவுப் பொருள்களை எடுத்துவரும் வேலைகள் இம்மாத இறுதியில் ஆரம்பமாகும்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டனர்.

காங்கேசன்துறை துறை துறைமுகத்தில் தற்சமயம் தரித்து நிற்கும் ''மெரிதல்'' கப்பலில் இருந்து தினசரி சுமார் 100 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் இறக்கப்படுவதாகவும் —

அவை காங்கேசன்துறையில் திருத்தப்பட்ட களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படுவதாகவும் —

தீவுப் பகுதியில் இருந்து கொண்டு செல்லப்பட்ட தொழிலாளர்கள் மூலம் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாத இறுதிக்குள் அங்கு உணவுப் பொருள் கையிருப்பு இரண்டாயிரம் தொன்னை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தீவுப்பகுதிக்கு 125 பேர் நாளை மறுதினம் செல்வர்

உறவினர்களைப் பிரிந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 125 பேர் நாளை மறுதினம் 'குமண' கப்பல் மூலம் தமது சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படவிருக்கின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவினர் செய்து வருகின்றனர்.

தீவுப்பகுதிக்கு அடுத்த தொகுதியினர் பின்னர் அழைத்துச் செல்லப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## கடற்கண்காணிப்புக் குறித்து

# படைகளுக்கு திருப்தியில்லை!

## இந்தியாவும் ஒத்துழைப்புத் தரவில்லையாம்

கொழும்பு, பெப். 18

வடபகுதிக்கு அப்பால் கடலில் இந்தியக் கடற்படையும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இப்பகுதி கடற் கண்காணிப்பில் இந்திய-இலங்கை கடற்படைகள் கூட்டாகச் செயற்படுவதற்கு இலங்கை தெரிவித்த யோசனைகளை இந்தியா நிராகரித்திருப்பதால், இப்பிரதேசத்தில் கடற் கண்காணிப்பு அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை. — இப்படி இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

சிங்கள வார இதழான 'ராவய' இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

வடபகுதி நிலை குறித்து அப்பத்திரிகை நேற்று முன்தினம் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கைக்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் புலிகளும் எந்த நிலையையும் எதிர் கொள்ளக் கூடிய வகையில் சகல யுத்த முஸ்தீபுகளையும் செய்திருக்கிறார்கள் என்றும் —

சகல துறைமுக, கடற்

[2 ஆம் பக்கம் பார்க்க]

# வளலாய், இடைக்காட்டில் நேற்று பொம்மர் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 18

வளலாய், இடைக்காடு, தொண்டமனாறுப் பகுதிகளில் — நெருக்கமான குடியிருப்பு மனைகள் அமைந்த இடங்களில் — நேற்று விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேறுற்று காலை 6 மணியளவில்-வளலாய்-கொடிக்காடுப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் மோதல் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து காலை 7 மணி முதல் பலாலி, வளலாய் இராணுவ முகாம்களிலிருந்து பத்தமேனி, இடைக்காடு, தொண்டமானாறு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை —

இப்பகுதிகளின் மீது ஹெலிக்கொப்டரிலிருந்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. நண்பகல் 11 மணிவரை ஹெலித் தாக்குதல் தொடர்ந்தது.

காலை 10. 30 மணியளவில் அப்பகுதியில் வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் இடைக்காடு மகாவித்தியாலயம் — இத்தடிச் சந்தியில் நான்கு

[2 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



அப்ப...... நாடாளுமன்றத்தைக் கோட்டை விட்டவையள் சர்வதேச நீதிமன்றம் போகினம் போலை...!

## வீமன்காமத்தில் ஷெல்! இருவர் காயமுற்றனர்!!

பலாலியில் இருந்து நேற்று மாலை வீமன்காமம் பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல்லினால் அப்பகுதியைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர்.

செல்லத்துரை ஸ்ரீகாந்தன் [வயது 34], வீரசிங்கம் மகாலிங்கம் [வயது 40] ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே—

வளலாயில் இருந்து நேற்று காலை படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.

இடைக்காடு வடக்கு கலட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவனேஸ்வரன் [வயது 30] என்பவரே காயமடைந்தவராவார். [உ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றில் விழுந்து சிறுவன் பலி

கிணற்றில் தவறி விழுந்ததாகக் கூறப்படும் 7 வயதுச் சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி மரணமானான்.

நேற்று முன்தினம்நடந்த இந்தச்சம்பவத்தில் வேலணையில் இருந்துஇடம்பெயர்ந்து வந்து நாவாந்துறை ஐந்து சந்திப் பகுதியில் தங்கியிருந்த கந்தஞானி குமுந்தன் என்ற சிறுவனே பலியானான்.

(ஒ-125)

# அந்தியேட்டி அழைப்பு



தோற்றம்: 1937 - 03 - 07

மறைவு: 1991 - 08 - 27

## திரு. சின்னத்தம்பி ஞானசேகரம் (ஐயர்)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 1992-2-19 புதன்கிழமை பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

[19768]

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் இராசையா கந்தசாமி

(சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகசங்க அங்கத்தினரும், பிரபல வர்த்தகரும் சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் தேவஸ்தானப் பொருளாளர்)

10 - 01 - 1992 இல் அமரர் இராசையா கந்தசாமி அவர்கள் அமரத்துவம் எய்திய வேளை பெருந்துயரடைந்திருந்த எமது துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதலளித்தவர்களுக்கும் அன்னாரின் அந்திமக் கிரியைகளில் கலந்து கொண்ட லயன்ஸ், லியோ கழகத்தினர்களுக்கும், கைத்தொழில் வர்த்தக சங்கத்தினர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட அன்பர்கள் மற்றும் ஏனையோருக்கும் 31ஆம் நாள் நினைவஞ்சலியில் கலந்து சிறப்பித்த அன்பர்கள், நண்பர்களுக்கும், நினைவஞ்சலிப்பாயாத்துதவிய ஆசிரியர் அவர்களுக்கும் இன்னும் சகல வழிகளிலும் எமக்குதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

மீனாட்சி அம்மன் வீதி
சங்கத்தானை,
சாவகச்சேரி.

[19764]

## ஷெல் தாக்கு

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை சுற்றுபுறக் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

## கடற்க...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கரைப் பிரதேசங்களிலும் கடற்கண்ணிகளும், நிலக் கண்ணிகளும் வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்புப் பகுதியினருக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

புலிகளுக்கான விநியோகப் பாதை பெருமளவு தடுக்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டாலும் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் விநியோகிக்கப்படும் பாதைகள் முற்றாகத் தடுக்கப்படவில்லை என்பது தெளிவு.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையை எப்போது ஆரம்பிப்பது என்பது குறித்து இன்னும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. எனினும் மார்ச் இறுதிவரை எதுவும் நடைபெறமாட்டாது என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைக்கு எல்லாம் தயார் என்றாலும், அதன் முடிவு எப்படி அமையும் என்பதில் பாதுகாப்பு வட்டாரங்களில் சந்தேகமான நிலையே நிலவுகிறது.

விடுதலைப் புலிகள் காடுகளுக்குத் தப்பிச் செல்லக் கூடிய பாதைகளைத் தடை செய்யாமல், எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் பயனளிக்கப் போவதில்லை.

யாழ்ப்பாணத்தைப் பிடித்தாலும் அங்கு நிர்வாகத்தை நடத்த விடாது குழப்பக் கூடியளவு புலிகள் சக்திமிக்கவர்கள் என்பதையிட்டே பாதுகாப்பு வட்டாரங்கள் அதிக கவனம் செலுத்துகின்றன.

திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவருக்கு 12 இராணுவச் சிப்பாய்கள் என்ற அடிப்படையிலே கணக்குப் பார்க்க வேண்டியிருக்கிறது.

மேலும் உத்தேச இராணுவ நடவடிக்கை பெருமளவு உயிரிழப்புக்கு வழி வகுக்கும் என்றும் —

அத்தகைய நிலை ஏற்பட்டால் சர்வதேச சமூகத்தின் பலத்த கண்டனத்துக்கு இலங்கை இலக்காகும் என்றும் —

அது பாதகமான விளைவையே இலங்கைக்குத் தரும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் ஒரு பிரிவினரிடையே கருத்து நிலவுகிறது — என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-10]

## ஜனாதிபதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகளை அப்பிரேரணையை நிராகரித்ததன்மூலம் சபாநாயகர் செயல் இழக்கச் செய்து விட்டார் என்பதாலும்—

இந்த விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல முடிவானதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் தொடர்பான மேல் நடவடிக்கைகளை முக்கிய அரசியல் வாதிகள் சிலர் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-10)

## வளலாய்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குண்டுகளை வீசின. இதனால் சில வீடுகள் சேதமுற்றன.

மீண்டும் நண்பகல் 1 மணியளவில் வந்த பொம்மர்கள் தொண்டமானாறுப் பகுதியில் ஐந்து குண்டுகளை வீசின. இதனால் தொண்டமானாறு வெளிக்கள நிலையக் கட்டடங்கள் சேதமுற்றன. வீசப்பட்ட குண்டில் ஒன்று வெடிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3-11-15)

# மானிடம் தழுவிய கோட்பாடு கம்ப காவியத்தின் ஆதாரம்

## இறுதி நாள் விழாவில் உரை

யாழ்ப்பாணம், பெப். 18

''மானிடம் தழுவிய கோட்பாடு தான் கம்பராமாயணத்தின் ஆதாரமாகும். கம்பன் மானிடத்தின் அடிப்படைகளை நிலைநிறுத்தி அதன் ஊடாகத் தெய்வீகத்தைக் காட்டியுள்ளான்.''

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழாவின் இறுதி நாளாகிய நேற்றுக்காலை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த வண. கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் தமது தலைமை உரையில் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கீத பூஷணம் திரு. சி. கணபதிப்பிள்ளையின் இசை நிகழ்ச்சியுடன் ஆரம்பமானது.

யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தொடக்க உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற ''கம்பனின் குறள் விளக்கம்'' என்ற பொருள் பற்றிய கருத்தரங்கிற்கு இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் தலைமை வகித்தார்.

'கம்பன் பிறந்தது இந்தியாவில்; வளர்ந்தது இலங்கையின் யாழ்ப்பாணத்தில், வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளை, குமாரசுவாமிப் புலவர், மகாவித்துவான் கணேசையர் ஆகியோர் கம்பராமாயண விளக்கத்திலும் ஆராய்ச்சியிலும் பெரும் பங்கை ஆற்றினார்கள்' என்று அவர் குறிப்பிட்டார்.

''வள்ளுவரின் குறள் பொன். கம்பனின் ராமாயணப் பொன்னைக் கொண்டு

[5 ஆம் பக்கம் பார்க்க]

# IN MEMORIAM



## RUTH JEYAMANY MANN

In ever loving memory of
RUTH JEYAMANY MANN
called to her eternal rest
on 18-2-91.

" The Fragrance Of Your Presence Lives On Nothing Can Destroy Or Take it Away "

Violet Cottage,
Uduvil.

LOVED ONES

[19767]

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி சிவக்கொழுந்து திருநாவுக்கரசு

தோற்றம்: 29—04—1919

மறைவு: 01—03—1991

திதி:- 18 - 02 - 1992

அன்பால் அரவணைத்து அறுசுவையும் எமக்கூட்டி
கண்போல் எமைவளர்த்த அம்மாவே!
எம் இல்லம் நிறைந்த உத்தமியாய் வாழ்ந்திருந்தீர்
இன்றெம் உள்ளம் நிறைந்த வேதனையைத் தந்துவிட்டு
பொட்டோடும் பூவோடும் பொன்னுலகம் போனதென்ன!

குமாரகோவிலடி,
காங்கேசன்துறை.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[19770]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத் துறைக்கு மேலதிகமாக 10 புள்ளிகள்

## பல்கலைக்கழக அனுமதியில் வழங்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 18

விளையாட்டுத் துறையில் மிகத் திறமையாக செயற்படும் மாணவர்களுக்கும் ஏனைய செயற்பாடுகளில் — தலைமைத்துவத்தில் முன்னிற்கும் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதிக்கு மேலதிகமாக பத்துப் புள்ளிகள் வழங்கப்படவிருக்கின்றன.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுனா அலுவிஹார இத்தகவலைத் தெரிவித்தார்.

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பத்துப் புள்ளிகளும் —

பாடசாலைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு ஐந்து புள்ளிகளும் — ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் அவர்களுக்குக் கிடைக்கும் மொத்தப் புள்ளிகளுடன் சேர்த்து வழங்கப்படும் என்றும் பேராசிரியர் அலுவிஹார தெரிவித்தார்.

விளையாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க திறமையைக் காட்டிய மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியில் ஒரு புள்ளியே இதுவரை மேலதிக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டு வந்தது தெரிந்ததே.

இதே வேளை — பாடசாலைச் செயற்பாடுகளில் தலைமைத்துவப் பங்கு வகிக்கும் மாணவருக்கும் பல்கலைக்கழக அனுமதியில் முன்னுரிமை வழங்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு எண்ணியிருக்கிறது.

பாடசாலை விளையாட்டுக் குழுக்களின் கப்டன்களாகவும் வகுப்புகளில் மாணவ முதல்வர்களாகவும் (Prefects) கடமையாற்றும் மாணவர்கள் இப்பொறுப்புகளினால் சில பாடங்களைத் தவறவிட்டு விடுகின்றனர். பெரும்பாலான மாணவ முதல்வர்களும் விளையாட்டுத்துறைக் கப்டன்களும் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர் என்றும் — தெரிவிக்கப்படுகின்றது.

இம் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதியில் விசேட அக்கறை காட்டப்படவுள்ளது. (இ-எ)

# 18மாத விளக்கமறியலின்பின் 1 நாள் சிறையுடன் விடுதலை

## ஏறாவூர் இளைஞருக்கு நேர்ந்த கதி

கொழும்பு, பெப். 18

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 18 மாத காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் நீதிமன்ற விசாரணையின் பின்னர், நீதிமன்றம் கலையும் வரையான சிறைத் தண்டனையுடன் விடுதலையானார்.

ஏறாவூரைச் சேர்ந்த காளிக்குட்டி சதீஷ்குமார் [சசி] என்ற 17 வயது இளைஞனே கடந்த வியாழனன்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ்.கடவத்த ஆராய்ச்சியினால் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடித் திரிவது பற்றியும்—

அவர்கள் சுவரொட்டி ஒட்டியது பற்றியும் தமக்குத் தெரிந்திருந்த தகவல்களை பொலீஸாருக்குத் தெரிவிக்கத் தவறியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. [உ]

## பவுடர் ரின்னில் தங்கச் சங்கிலி கடத்த முயற்சி

கொழும்பு, பெப். 18

ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான 30 தங்கச் சங்கிலிகளைக் கடத்தி வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு நபரை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் பிடித்தனர்.

அச் சங்கிலிகள் யார்ட்லி பவுடர் ரின் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்றும்—

அந்த நபரை அழைத்துச் செல்ல வான் ஒன்றில் வந்திருந்த மற்றும் இரண்டு நபர்களும் பிடிபட்டனர் என்றும்—

கடத்தல்காரருக்கும் வானில் வந்த இரு நபர்களுக்கும் தலா 2 லட்சம் ரூபா விதிக்கப்பட்டு வானும் பறிமுதல் செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

# கிழக்கில் தற்போது நடப்பது 'ஒப்பரேஷன் ஈஸ்டன்கட் ஒவ்'

கொழும்பு, பெப். 18

''ஒப்பரேஷன் ஈஸ்டன் கட் ஒவ்'' [Operation Eastern Cut Off] என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை தற்போது கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வருகிறது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நான்காயிரத்துக்கும் அதிகமான துருப்புகள் ஆட்டிலறி மற்றும் கவச வாகனங்களின் உதவியுடன் இந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும்—

போர் விமானங்களின் உதவியுடன் நான்கு படை அணிகள் தொப்பிகலகாட்டை நான்கு பக்கங்களாலும் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்துகின்றன என்றும்—

சில கட்டங்களில் விடுதலைப் புலிகளிடமிருந்து பலமான எதிர்ப்புகளை இராணுவம் எதிர்நோக்குகின்றது என்றும்— மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-எ)

## ஊரியான் பாதையை மூட படையினர் முயற்சியாம்

கொழும்பு, பெப். 18

வடபகுதியில் இருந்து வவுனியாவுக்கு வரும் மக்களின் பாதையாக விளங்கும் ஊரியானை மூடிவிட இராணுவம் திட்டமிட்டு வருவதாகவும் இதன் மூலம் ஆனையிறவுப் பாதையை மக்கள் பயன்படுத்துவார்கள் என அவர்கள் எதிர்பார்ப்பதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

# ஸ்ரீலங்கா மக்கள் கட்சிக்குள் உட்பூசல் அதிகரிப்பு

கொழும்பு. பெப். 18

ஸ்ரீலங்கா மக்கள் கட்சிக்குள் நிலவி வந்த உட்பூசல் உச்சக்கட்டம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தலைவராக திரு. ஒஸி அபயகுணசேகரா நீடிப்பதற்கு கட்சிக்குள் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்க மத்திய குழுவை இவ்வாரம் கூட்டுவது என்று கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

இதே வேளை — மேல் மாகாண சபையில் தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் திரு. ஒஸி அபயகுணசேகராவை அப்பதவியில் இருந்து அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பதா அல்லது மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொள்வதா என்ற நிலைக்கு திரு. ஒஸி அபயகுணசேகரா தள்ளப்பட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-எ)

## "விழிப்பு" வெளிவருகிறது

யாழ்ப்பாணம், பெப். 18

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவுக்காக மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு ''விழிப்பு'' என்ற வாராந்த பத்திரிகை ஒன்றை வெளியிடத் தொடங்கியுள்ளது.

புதன்கிழமைதோறும் வெளியாகும் இந்தப் பத்திரிகையின் இரண்டாவது இதழ் கடந்த 12 ஆம் திகதி வெளியானது. (உ)

## அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், பெப். 18

ஏழைகள், ஆதரவற்றோர், அனாதைகள், விதவைகள் ஆகியோருக்கு உதவிகள் கிடைக்க ''இந்து சமய சமூக அபிவிருத்தி நிதியம்'' ஒன்று இன்று செவ்வாய் காலை 10 மணிக்கு நல்லை ஆதீனத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது.

இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில், நல்லை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் இந்த வைபவம் நடைபெறவுள்ளது. (த-3)

# தொண்டமானின் யோசனைக்கு எதிரான பிரசாரம் தொடரும்

## 'ஹெல உறுமய' அறிவிப்பு

கொழும்பு, பெப். 18

கட்சித் தலைமைப்பீடத்தின் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்களுக்கு விட்டுக்கொடாது தொண்டமானின் யோசனைகளுக்கு எதிரான எமது பிரசார இயக்கம் தொடரும்.

'ஹெல உறுமய' (தேசிய பாரம்பரியம்) அணியைச் சேர்ந்த சுதந்திரக் கட்சி எம். பிக்கள் மேற்கண்டவாறு பிரதிக்ஞை எடுத்துள்ளனர்.

தொண்டமானின் யோசனைகளுக்கு எதிரான பிரசார இயக்கம் கடந்த சுதந்திர தினமன்று ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே.

சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிரி சேனநாயக்கா கட்சி உறுப்பினர்களிடையே விநியோகித்துள்ள சுதந்திரக் கட்சியின் உத்தியோக பூர்வ அறிக்கைக்குப் பதிலளிக்குமாற் போன்றே இப்பிரதிக்ஞையை 'ஹெல உறுமய' அணியினர் எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

'அரசியல் உத்தி ஒன்றை நோக்கி, உட்பிரிவுகள் இன்றி ஓர் அமைப்பாக கட்சி பணிபுரிய வேண்டும் என்றும், ஆகவே கட்சிக்குள் புதிய அணிகள் தோன்ற வேண்டிய அவசியம் இல்லை என்றும், கட்சியின் ஒழுங்கு விதிகளை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் செயலாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், 'ஹெல உறுமய' அணி பற்றி பெயர் குறிப்பிடப்பட்டு பிரஸ்தாபிக்கப்படவில்லையாயினும், அந்த அணி குறித்தே அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. [இ-எ]

## தொண்டா யோசனையை எதிர்ப்போர் சேரலாமாம்

கொழும்பு, பெப். 18

தொண்டமான் யோசனைகளை எதிர்க்கும் எவரும் 'ஹெல உறுமய' (தேசிய பாரம்பரியம்) அணியில் சேரலாம்.

இப்படி அந்த அணியின் தலைவர் திரு. திலக் கருணாரத்னா அறிவித்திருக்கின்றார்.

களுத்துறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பியான அவர் விடுத்த அறிக்கை ஒன்றில்,

''சுதந்திரக் கட்சியுடன் தொடர்பு எதுவும் இல்லாத சுயேச்சையாகவே 'ஹெல உறுமய' அணி இயங்கி வருகின்றது.

நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு, இனவாத ஒழிப்பு, நாட்டில் வாழும் எவரும் எங்கும் சென்று வாழும் உரிமை, தொண்டமான் யோசனைகளை எதிர்ப்பது ஆகிய கொள்கைகளை ஏற்றுக் கொள்பவர்கள் எமது அணியில் சேர்ந்து கொள்ளலாம்'' — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## கொழும்பில் 'ஹெல உறுமய' பொதுக் கூட்டம்

கொழும்பு, பெப். 18

'ஹெல உறுமய' அணியின் பிரசாரப் பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

அணியின் தலைவரான திரு. திலக் கருணாரத்னா இதனைத் தெரிவித்தார். [இ-எ]

# 87 ஜூலை ஒப்பந்தத்துக்கு மேலாக தமிழர் எதனையும் கோரக்கூடாது

## காமினி திஸநாயக்கா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 18

1987 ஜூலை கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டுள்ளதற்கு மேலாக இலங்கையில் உள்ள தமிழர்கள் எதனையும் கோரக்கூடாது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான திரு. காமினி திஸநாயக்கா 'சண்டேரைம்ஸுக்கு' அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் முதல் தடவையாக சட்டபூர்வமாக இலங்கை பலமொழி, பல இன, பல சாதி சமூக அமைப்புகள் உள்ள நாடு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இன்று இனப்பிரச்சினை என்பது விடுதலைப் புலிகளின் பிரச்சினை தான். விடுதலைப் புலிகளை எப்படி பேச்சு வார்த்தை மேசைக்குக் கொண்டு வருவது? அவர்களை இராணுவ ரீதியில் எப்படி ஓரங்கட்டுவது என்பது தான் இன்றுள்ள பிரச்சினையாகும். ஆகவே போராளிப் பிரச்சினையும் இனப்பிரச்சினையுடன் சமமாக நோக்கக் கூடாது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் முழுமையாக அமுல் நடத்தப்பட வேண்டும். தீர்வு ஒன்றைக் காணுவதற்கான எதிர்கால அடிப்படையாகக் கூடிய வளம் இதில் உள்ளது. சிறுபான்மையினர் எழுப்பக் கூடிய பல பிரச்சினைகள் தொடர்பான, புதிய பேச்சு வார்த்தைக்கான ஆரம்பமாக இது இருக்க முடியும்.

இவ்வாறு திரு. காமினி திஸநாயக்கா மேலும் தெரிவித்தார்.

திரு. காமினி திஸநாயக்காவின் பேட்டியில் இடம்பெற்ற மற்றும் சில அம்சங்கள் வருமாறு;

கேள்வி: தமிழருக்கு அதிகாரப் பகிர்வு வழங்கும் விஷயத்தில் உங்களின் கட்சி எந்தளவு செல்லும்?

காமினி: பூரணமாக மக்களுக்கு அதிகாரப்பரவலாக்கல் வழங்கும் - தமிழருக்கு மட்டுமல்ல, சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் அது வழங்கப்படும். ஏனென்றால் அது தான் இன்றுள்ள ஒரே ஒரு வழி. கொழும்பில் இருந்து கொண்டு நாட்டை ஆட்சி செய்ய முடியாது. ஜே. வி. பியின் ஆணிவேர், தமிழர் பிரச்சினை, இருப்பவருக்கும் இல்லாதவர்களுக்கும் இடையேயான வேறுபாடு - இவை எல்லாவற்றிற்கும் இது தான் காரணம்.

கேள்வி: பிரேமதாஸா, பிரபாகரன், பாஸ்கரலிங்கம் அரசாங்கம் என்று தற்போதைய அரசாங்கத்தை நீங்கள் முன்பு கூறினீர்கள். இதனால் நீங்கள் ஒரு இனவாதி என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதே?

காமினி: ஆம். அது உண்மை. வடக்கு - கிழக்கின் காரணியாக பிரபாகரன் இருக்கலாம். பிரேமதாஸாவின் பொருளாதார நிபுணராக பாஸ்கரலிங்கம் உள்ளார். பிரேமதாஸா ஒரு பொருளாதார நிபுணர் என்றும் எவரும் சொல்லவில்லை.

பாஸ்கரலிங்கம் தான் திறைசேரியை நடத்துகின்றார்; பொருளாதாரக் கொள்கையையும் வகுக்கின்றார். ஆகவே நான் தவறான எண்ணத்துடன் அப்படிக் கூறவில்லை. அப்படி நீங்கள் எண்ணினால் எல்லோரையுமே இனவாதிகள் என்றழைக்கலாம். [இ-எ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

16-02-92 அன்று கல்வியன் காட்டு சந்திக்கு அண்மையில் சி. இரத்தினம் என்ற பெயரையும், கட்டுவன் என்ற விலாசத்தையுமுடைய நிவாரண அட்டையும், உணவு முத்திரைகளும், நஷ்டஈட்டு அட்டையும் அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இவ் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி. இரத்தினம், புதுச் செம்மணி வீதி, நல்லூர். [19762]

### இலவச திருமணசேவை

36 வயது, உத்தராடம் 4. செவ்வாய் 2, படித்த பெண்ணுக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் ஞாயிறு காலையில் எமது சேவையைப் பெற்றுக்கொள்ளலாம். து.விமலா, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். [5048]

### காணவில்லை

8-2-92 சனிக்கிழமை இரவிலிருந்து எனது பொமனேரியன் வெள்ளைநிற 5 மாத பெண்நாய்க்குட்டியைக் காணவில்லை. கண்டவர்கள் எஸ். சாந்தலிங்கம், 137, மூத்த விநாயகர் வீதி, நல்லூர் என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [19758]

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [சி-1462]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'', 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (5045)

### சோதிடம்

உங்களின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால பலன்களை விவரமாக அறிய விரும்புகிறீர்களா? அப்படியானால் நேரில் வாருங்கள்! கேட்டுப் பாருங்கள்!! ஜாதகம், குறிப்பு, கைரேகை, எண் விஞ்ஞானம், சாமுத்ரிகா லட்சணம் ஆகியன கொண்டு, உங்களது கல்வி, உத்தியோகம், தொழில், விவாகம் அனைத்தையும் அறிந்திட நாடுங்கள்; த. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (19754)

Personal
NEW SCIENCE CENTRE
நடத்தும்
முன் மாதிரி விசேட பரீட்சை
தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளது. புதிய திகதி அட்டவணையை நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளவும்.
[சி/1523]

# புலிகள் ஊடுருவலை தடுக்க மொனறாகலையில் 'பங்கர்'

கொழும்பு, பெப். 18

மொனறாகலை மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் வீதித் தடைகளையும், ''பங்கர்''களையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக மொனறாகலை பொலீஸ் அத்தியட்சகர் றொஹான் அபயகுணவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

சிங்கள வார இதழ் ஒன்று இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பிபிலை, மகியங்கனைப் பகுதிகள் ஊடாக ஊவா மாகாணப் பிரதேசத் தோட்டப் பகுதிகளுக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்கவே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-5]

## அறுவர் குழு

கொழும்பு, பெப். 18

திருக்கோணேஸ்வரர் கோவில் நிர்வாகம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஆறு பேர் கொண்ட குழு ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் லெப். ஜெனரல் நளின் செனவிரத்னா நியமித்துள்ளார்.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையை சமர்ப்பிக்க பணிக்கப்பட்டுள்ளனர். (த-5)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 28 | 11 |
| 05 | 03 |
| 1959 | 1990 |

### திருமதி காந்திமதி செல்லத்துரை

திதி: 18 — 02 — 1992

எங்கள் மனதினில் அழியாத ஓவியமாய்,
கனவிலும் கலையாத காவியமாய், அன்பாலே,
எம்மை எல்லாம் மூழ்கடித்த காந்தியே!
இன்றோடு நீர் பிரிந்து ஈராண்டு ஆனாலும்
எம் கண்ணோடு வழிகின்ற நீர் மட்டும் மாறவில்லை.


உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் நினைவுடன் வாழும்:
கணவன், மகள், ஐயா, அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், மகன்மார், மருமக்கள்.

'' திருமால் இல்லம் ''
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (19749)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 26 | 19 |
| 10 | 01 |
| 1949 | 1992 |

### அமரர் கிருஷ்ணன் சிவராசா

பலகலைச் செல்வர் வாழ் பளையூர்தனில்
சிலகலைகள் கற்றுச் சீருடன் வாழ்ந்து
திருமால் திருமந்திரம் ஸ்ரீராம செயமதனை
ஒரு நாளும் மறவாது ஓதியே வந்த
பாசமிகு மகன், பரிவுடைய தந்தை,
ஆசைமிகு கணவன், ஆருயிர் அண்ணன்,
நேசமிகு மாமன், நிகரிலா மைத்துனன்
திருநிறை செம்மல் சிவராசா எமதாருயிர்ச் சிவமே
பெரு நெருப்பள்ளி எமதிதயத்தில் கொட்டி
அனலிடைப் புழுவாய் அலறித் துடிக்கவிட்டு
அமலனடி சேர்ந்தீர் ஆறுமோ எமது சோகத் தீ!

பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மருமக்கள்.

வண்ணான் கேணி,
பளை. [19733]

# என்னை சுட்டு கொன்றாலும் கொள்கை தவறமாட்டேன்

## ஜனாதிபதி பிரேமதாஸா கூறுகிறார்

கொழும்பு, பெப். 18

எனக்கு சிலவேளை ஏதாவது நோய் வரலாம். அல்லது என்னை எவராவது சுட்டுக் கொல்லலாம். சாதாரண தொழிலாளி கூட என்னை சுட்டுக் கொல்லலாம். என் விதி அப்படி இருக்கலாம். ஆனால் நான் எனது அரசியல் கொள்கைகளை ஒரு போதும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த கட்சியின் கொழும்பு மாவட்ட வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய போது ஜனாதிபதி பிரேமதாஸா இப்படிக் குறிப்பிட்டார்.

''எனக்கு சாதகம் இப்போது சரியில்லை என்று சிலர் கூறுகிறார்கள். மார்ச் மாதத்தோடு அது சரியாகி விடுவார் என்றெல்லாம் கணிப்புக் கூறுகின்றனர்.

''எனக்கு எவ்வித இன்னல் ஏற்பட்டாலும் மக்களின் நலன் கருதி நான் கடைப்பிடிக்கும் அரசியல் கொள்கையில் இருந்து ஒரு போதும் விலகப் போவதில்லை''.

நான் வாழ்ந்தாலும், செத்தாலும் இலட்சியத்தோடு செயற்படுவதே எனது கொள்கை. எந்த நெருக்கடிக்கும் நான் அஞ்சப் போவதில்லை.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

## இந்தியாவிலிருந்து திரும்பும் ஈழ அகதிகள் விவகாரம்:

# ஒத்துழைப்பது குறித்து ஐ. நா. தூதரகம் ஆராய்வு

கொழும்பு, பெப். 18

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவது தொடர்பான நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்கும் சாத்தியம் குறித்து ஐக்கிய நாடுகள் அகதிகள் தூதரகம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அறிக்கை ஒன்றில் இது பற்றி ஐக்கிய நாடுகள் அகதிகள் தூதரகம் தெரிவித்திருப்பதாவது;

இந்திய - இலங்கை நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு நடவடிக்கைக்குப் புறம்பாக அகதிகள் தாயகம் திரும்பும் திட்டம் செயற்படுத்தப்படுமானால் இது விஷயத்தில் ஐக்கிய நாடுகள் அகதிகள் தூதரகம் ஆதரவை வழங்க முடியும்.

இதன் கருத்து — அகதிகள் தாயகம் திரும்ப கப்பல் ஏறும் இடத்தில் வைத்து, அவர்கள் தாமாக விரும்பி தாயகம் திரும்புகின்றார்களா, இல்லையா என்பதை ஐ. நா. அகதிகள் தூதரகம் உறுதி செய்யவேண்டும் என்பதே ஆகும்.

புதுடில்லியில் ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கு இந்தியா தெரிவிக்கும் எதிர்ப்பு பற்றி ஐ. நா. தூதரகத்திற்குத் தெரியும்.

எனினும் - இலங்கை அகதிகள் தாயகம் திரும்புவது தொடர்பான விஷயங்கள் பற்றி ஐ. நா அகதிகள் தூதரகக்குழு ஒன்றுடன் பேச்சுகள் நடத்த முதல் தடவையாக இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது.

மீன் (விடுதலைப் புலிகள்) நீந்தும் நீரை (அகதிகளை) வெளியேற்றும் அரசியல் நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு இருக்கின்றது.

இப்படி ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடப்பாடற்ற முறையிலான பேச்சுக்கள் இந்தியா, இலங்கை மற்றும் ஐ. நா. அகதிகள் தூதரகம் ஆகியவற்றுக்கு இடையே இடம் பெறும் சாத்தியக்கூறு பற்றியும் அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பும் விஷயத்தில் தலையிட வேண்டாம் என்று விடுதலைப் புலிகளுடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் ஐ. நா. அகதிகள் தூதரகம் பேசியிருப்பதாகவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

துருக்கியர்கள் மற்றும் யூகோஸ்லேவியர்கள் ஆகியோருக்கு அடுத்தபடியாக ஐரோப்பாவில் ஆகக் கூடுதலான எண்ணிக்கையில் அகதிகளாக இருப்பவர்கள் இலங்கையர்களே என்று ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## வவுனியாவில்

# காவலரண்களுக்கு சமீபமான பாடசாலைகள் இயங்கும்

கொழும்பு, பெப். 18

காவலரண்களுக்குச் சமீபமாக உள்ள வவுனியாப் பாடசாலைகள் மீண்டும் இயங்குவதற்கு இராணுவம் அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் காவல் புரிகின்ற காவலரண்களில் இருந்து ஐம்பது மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள அரசாங்க பாடசாலைகளுக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடந்த மாநாடு ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனவிரத்தினா அம்மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். (த-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பிரித்தாளும் கபடம்!

அழுத்தங்கள், அடக்கு முறைகள் அதிகரிக்க அதிகரிக்க மக்களின் எழுச்சியும், எதிர்ப்பும், வன்மமும் அதிகரிக்கும். இது மனிதனுக்கு உள்ள இயல்புகளில் ஒன்று. இந்த உளவியல் உண்மையை அரசாங்கம் இன்னும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை!

தங்களது வாழ்வுரிமைகளை, நியாயமான உரிமைகளைக் கேட்டுப் போராடும் தமிழர்களை இராணுவ அட்டூழியங்கள் மூலமும் ஏனைய அழுத்தங்கள் மூலமும் அடக்கி ஒடுக்கிவிட அரசாங்கம் நினைப்பது பெரும் முட்டாள்தனம் அன்றி வேறல்ல.

சிங்களம் மட்டும் சட்டம் தான், இனப்பிரச்சினை இப்போதைய நிலைக்கு வளர்ந்து நாட்டை மிகுந்த நெருக்கடிக்குள் ஆழ்த்துவதற்குக் காலாக அமைந்தது என்று ஜனாதிபதி உட்பட தற்போதைய தலைமுறை அரசியல்வாதிகள் பலரும் கூறி வருகிறார்கள். ஆனால் அவ்வாறு கூறிக் கொண்டே, தமிழர்களை மேன்மேலும் அடக்கி ஒடுக்குவதற்கான அழுத்தங்களின் பட்டியலை நீட்டி வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவற்றில் ஆகப் பிந்தியது யாழ்ப்பாண மாவட்டத்தின் சிவில் நிர்வாகச் செலவுகளுக்கான நிதியை சரி அரைவாசியாகக் குறைத்ததாகும்.

1990ஜூனில் அரசு வடக்கு-கிழக்கில் யுத்தத்தைப் பிரகடனம் செய்தது முதல், அரசாங்கம் மனிதாபிமானம் இல்லாத வகையில் தமிழர்களின் வாழ்க்கையையே அடியோடு ஒழித்துவிடும் அளவுக்கு அழுத்தங்களைப் போட்டு வருகிறது.

தமிழர்களுக்கு உரிய உணவு முதல் மருந்து வரை, போக்குவரத்து முதல் கைத்தொழில் வரை சகல துறைகளும் முடங்கியும், ஒடுங்கியும் போகும் அளவுக்கு அரசு அவர்கள் மீது வேண்டாத கஷ்டங்களையும் தடைகளையும், வேதனைச் சுமைகளையும் சுமத்தி வருகிறது. அவற்றில் ஆகப் பிந்தியதே யாழ் மாவட்ட நிர்வாகச் செலவுகள் வெட்டப்பட்டதாகும்.

இம்மாதம் ஒன்பதாம் திகதி ''திரைமறைவு நாடகம்'' என்ற தலைப்பில் இப்பத்தியில் வெளிவந்த கருத்துரையில், தமிழ்ப் பகுதிகளுக்கு வழமையாக ஒதுக்கப்படும் பணம் குறைக்கப்படுவதற்கான காரணங்களை விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

தமிழ்ப் பகுதிகளுக்குரிய பணத்தை, நிதிக் கஷ்டத்தைக் காரணம் காட்டிக் குறைப்பது, பொருளாதாரத் தடை போன்ற அழுத்தமே என்பதை வெருமே இலகுவில் புரிந்து கொள்வர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பகுதிகளில் சிவில் நிர்வாகத்தைச் சீராக்கப் போவதாகக் கூறும் அரசு, அதில் அக்கறை காட்டும் அரசு, தனது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழும் தமிழ் மக்களைத் தண்டிக்க முனைந்திருக்கிறது!

தமிழர்களை பிரித்து ஆள்வதற்கும், அவர்களின் மன நிலையை மாற்றுவதற்குமான பெரும் கபடம் நிறைந்த சூழ்ச்சி என்றே இதனைப் பார்க்க வேண்டும்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை வெறும் அழுத்தம் மட்டுமல்ல. பெரும் அரசியல் நோக்கம் நிறைந்ததுமாகும். இது குறித்து தமிழ் மக்கள் வாளாதிருக்கக் கூடாது. எதிர்ப்பைத் தெரிவித்து வெகுசனப் போராட்டங்களை ஒன்று திரண்டு நடத்த வேண்டும்.

# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் புலிகளும் அங்கம் வகிப்பதே சிறந்தது

## அரச சார்புப் பத்திரிகை கருத்து

அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள ''டெய்லி நியூஸ்'' ஆங்கில நாளிதல் 12-2-1992 ஆம் திகதிய ஆசிரியர் தலையங்கத்தின் சுருக்கிய வடிவம் இது.

நாடு சுதந்திரமடைந்த் பின்னர் நாற்பத்து நான்கு ஆண்டுகளாக நாட்டில் குழப்பத்தை உருவாக்கியதில் கட்சி அரசியல் பெரும் பங்கு வகித்துள்ளது என்று கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் பொருத்தமாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

நன்மதிப்புப் பெற்ற கல்விமானான பேராசிரியர் பீரிஸ் தெளிவான சிந்தனையுடன் பேச்சுக்களை நிகழ்த்தி வருபவர்.

தேசிய நிகழ்ச்சி நிரலில் இன்று சாமாதானத்தின் தேவை தான் இப்போது ஆதிக்கம் செலுத்துகின்றது. இந்த நேரத்தில் பேராசிரியர் கூறியதில் உள்ள நல்ல அம்சங்கள் சிந்தனைக்குரியவையாகும்.

எந்தச் சாதி, சமயத்தைச் சேர்ந்தவராக நாம் இருப்பினும் இன்று 'தமிழர் பிரச்சினை' என்றழைக்கப்படும் நெருக்கடியின் மூலகாரணத்தை நாம் மறக்க முடியாது. ஒரு பிரச்சினை பேரழிவை ஏற்படுத்தக் கூடியதான உள்நாட்டு யுத்தமாக வெடித்தது பற்றிய சமகால சரித்திரம் 1956 இல் உருவான 'சிங்களம் மட்டும்' கோஷம் எழும்பிய காலத்திற்குச் செல்கிறது. தமிழ் சமூகத்தின் மத்தியில் அநீதி நிகழ்ந்துவிட்டது என்ற உணர்வையும் '1956 சிங்கள மட்டும் கோஷம்' ஏற்படுத்தியது.

அதில் உள்ள சரி, பிழை எப்படியிருப்பினும், இவ்விஷயத்தில் என்ன பொருத்தமானதாக இருக்கின்றதென்பதையே கவனிக்க வேண்டும்.

### இரண்டு கட்சிகள்

பிரிட்டிஷாரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற தன் பின்னர் இரண்டு பெரிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் தான் நாட்டை ஆண்டு வந்துள்ளன.

இந்த இரண்டு கட்சிகளும் தங்களில் எந்த ஒரு கட்சியும் இப் பிரச்சினையைத் தீர்க்காமலிருக்குமாறு நடந்து கொண்டன. பண்டா-செல்வா ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியக்கட்சி கிழித்தெறிய வைத்தது. இப்பிரச்சினையின் பதற்றத்தைத் தணித்திருக்கக் கூடியதான அதிகாரப் பரவலாக்கல் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க டட்லி சேனநாயக்காவையும் செல்வநாயகத்தையும் சுதந்திரக் கட்சி அனுமதிக்கவில்லை.

நாட்டின் இனங்களுக்கு இடையேயான உறவுகளை அழிக்கக் கூடியதாக, பிரிக்கக் கூடியதாகவே கட்சி அரசியல் இருந்து வந்தது என்று பேராசிரியர் பீரிஸ் உறுதியாகச் சொன்னார். இதற்காக அவரில் எவரும் பிழை காண முடியாது.

தேச நலனுக்கு இது முக்கியமானது என்று அவர் சரியாகக் கூறியுள்ளார். எம் மத்தியில் கட்சி அரசியல் உருவாக்கியதுவேஷமும் கசப்புணர்வும் முன்னரிலும் பார்க்க இன்று கூடுதலாகக் காணப்படுவது துக்கரமான உண்மையாகும்.

அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து பிரதான அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் உடன்பாடும் இன்றி தற்போதைய இனக் குரோதத்தையும் தொடர்ந்து இரத்த ஆறு ஓடுவதையும் நிறுத்திவிட முடியாது என்பதை கடந்த நான்கு தசாப்தங்களாக நாம் அடைந்த அனுபவங்கள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன என்றும் பேராசிரியர் பீரிஸ் முடிவாகக் கூறியிருக்கிறார். நாம் அறிந்து கொண்ட இந்த உண்மையை அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டு அப்படி ஒரு உடன்பாட்டைக் காணுவது இன்று மிக முக்கியமானதாகும்.

இதனை அனைத்துக் கட்சி மாநாடு மூலம் அடைய ஜனாதிபதி பிரேமதாஸா நடவடிக்கை எடுத்தார். அதிலிருந்து வெளியேற சுதந்திரக் கட்சி முடிவு செய்ததால் அது தோல்வியில் முடிவடைந்தது. அதன் பின்னர் மங்கள முனசிங்க தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. இத்தெரிவுக் குழுவின் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது.

இத் தெரிவுக்குழுவில் தமிழீழ விடுதலைப் புலிகளும் பங்கு பற்றியிருக்க வேண்டும் அதுசிறந்ததாகஇருந்திருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்பினால், தற்போது வெற்றிடமாக உள்ள வடபகுதி ஆசனங்களில் ஒன்றுக்கு தமது உறுப்பினர் ஒருவரை நியமித்து முறையாக நாடாளுமன்ற தெரிவுக்குழு நடை முறையில் சேர்ந்து கொள்ள முடியும்.

இச் சந்தர்ப்பத்தில் சுதந்திரக் கட்சியில் 'ஹெல உறுமய' அணி தோன்றியிருப்பது தளர்வைத் தருகின்றது......

..............................

★

# சர்வதேச மத்தியஸ்தத்தை இலங்கை ஏற்க மறுக்கிறது

## கலாநிதி பாலசிங்கம் பேட்டி

யாழ்ப்பாணம், பெப். 18

''இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஐ.நா.வின் உதவியை மட்டுமல்ல சர்வதேச மத்தியஸ்தத்தையும் நாம் விரும்புகிறோம். ஆனால் இலங்கை அரசு அதனை ஏற்க மறுக்கிறது.''

இப்படிக் கூறியிருக்கிறார் விடுதலைப்புலிகள் அரசியல்—ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம். கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பேட்டியின் சில பகுதிகள் நேற்றைய உதயனில் வெளிவந்தன.

கேள்வி: இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஏனைய வட்டாரங்களில் இருந்து மாற்றுத் திட்டம் ஒன்றை எதிர்பார்க்கும் விடுதலைப் புலிகள் தாமாகவே ஏன் ஒரு திட்டத்தை முன்வைக்கக் கூடாது?

பதில்: இனப் பிரச்சினைத் தீர்வுக்கு தமிழ் ஈழம் தான் நாம் முன் வைத்த திட்டம். அரசு இதனை விரும்பாத பட்சத்தில் மாற்றுத் திட்டம் ஒன்றை முன் வைத்தால் நாம் அதனைப் பரிசீலனை செய்வோம் என நாம் தெரிவித்துள்ளோம்.

கேள்வி: நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதிருக்கும் மத்திய கிழக்குப் பிரச்சினைத் தீர்வுக்கு தற்போது ஐக்கிய நாடுகள் தலையீட்டினால் பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஏன் ஐ. நாவின் உதவியை நாடக்கூடாது?

பதில்: ஐ. நா. மாத்திரம் அல்ல. சர்வதேச மத்தியஸ்தம் எதனையும் நாம் விரும்புகிறோம். ஆனால் இலங்கை அரசுதான் அதனை ஏற்க மறுக்கிறது. ஓர் அரசாங்கம் விரும்பினாலே ஐ. நா. ஸ்தாபனம் அந்நாட்டுப் பிரச்சினையில் தலையிடும். எம்மைப் போன்ற அமைப்புகளின் வேண்டுகோளை ஏற்று எமது பிரச்சினையில் அது தலையிடமாட்டாது.

தனிப்பட்ட முறையில் ஆஸ்திரேலியா, கனடா, நோர்வே, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகள் எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவ ஏற்கனவே முன் வந்துள்ளன. ஆனால் இலங்கை அரசு அதனை விரும்பாததால் அது கைகூடவில்லை. எமது பிரச்சினை சர்வதேச அரங்குக்கு செல்வதை அரசு விரும்பவில்லை.

கேள்வி: குடாநாட்டை புலிகளிடமிருந்து மீட்பதற்கு அரசு பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளதே தற்போதைய நிலையில் உங்களால் இத்தகைய தாக்குதலை தாக்குப் பிடிக்க முடியுமா?

பதில்: இராணுவம் யாழ். குடாவுக்குள் வந்தால் எதிர்த்துப் போராட நாம் தயாராகவே இருக்கிறோம். எமது மண்ணை அங்குலம் அங்குலமாகப் பாதுகாக்க நாம் போராடுவோம்.

கேள்வி: விடுதலைப் புலிகள் முன்னரிலும் பார்க்க இப்போது சமாதானத்தைக் கூடுதலாக விரும்புவது போல் அவர்களது அவ்வப்போதைய அறிக்கைகளில் இருந்து தெரிய வருகிறது. இது அவர்கள் யுத்தத்திற்குப் பின் நிற்கிறார்களா என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது?

பதில்; தற்போது 3 லட்சம் அகதிகள் யாழ். குடாநாட்டில் அடைக்கலம் பெற்றுள்ளார்கள். அகதிகள் அல்லாதோரும் நீண்ட காலமாகப் பல கஷ்டங்களை அனுபவித்து வந்துள்ளார்கள். இந்த நிலையில் அரசு ஒரு பாரிய படையெடுப்பை யாழ். குடா நாட்டின் மீது மேற்கொள்ளுமேயானால் தொடர்ந்தும் மக்களுக்கு கஷ்டங்களும், நஷ்டங்களுமே ஏற்படும். இதனை மனதில் கொண்டே விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் ஒன்றை அமுல் செய்து, தீர்வுப் பேச்சுவார்த்தையை தொடர வேண்டும் என கோருகின்றனர். (இ-5)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவ ஆஸ்திரேலியா தயார்!

கொழும்பு, பெப். 18

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் இலங்கை அரசுக்கு உதவ ஆஸ்திரேலிய அரசு இன்னும் தயாராக இருக்கின்றது.

கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இலங்கையின் நெருங்கிய நட்பு நாடு ஆஸ்திரேலியாவாகும். இந்த வகையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் என்ன பங்கை ஆஸ்திரேலியா வகிக்க முடியும் என்பது குறித்து இலங்கையுடன் ஆராய ஆஸ்திரேலிய அரசு விருப்பம்கொண்டுள்ளது என்றும் அப் பேச்சாளர் சொன்னார்.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண கொமன்வெல்த் அமைப்பின் மத்தியஸ்தத்தை நாடலாம் என்ற ஆஸ்திரேலிய யோசனை இந்திய அரசுடன் கலந்தாலோசனை நடத்திய பின்னரே பரிசீலனை செய்யப்படும் என்று இலங்கை அரசு அறிவித்திருப்பது தெரிந்ததே.

அதன் பின்னரே, கொழும்பில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகப் பேச்சாளர் முன் கண்டவாறு தெரிவித்தார். (இ-எ)

### மானிடம்...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்த ஆபரணம்'' என்று அவர் மேலும் கூறினார்.

கருத்தரங்கில் திரு. க. சொக்கலிங்கம், திரு. சிவராமலிங்கம், திரு. ச. விநாயகமூர்த்தி, திரு. இ ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள். (இ-க)

### இலவச வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

ஆண்டு 3 முதல் ஆண்டு 9 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரால் யாழ் குருநகர் சென். றோக் றோ. க. த. க. பாடசாலையில் இலவசமாக கல்வி போதிக்கப்படவுள்ளது

இந்த வகுப்புக்களில் சேர்ந்து கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் அப்பாடசாலையில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ)

### செல்லச்சாமி கோரிக்கை

கொழும்பு, பெப். 18

சிவில் உடையில வருவோரால் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் கடத்தப்பட்டு வருவது, தோட்டங்களில் பதற்றமும், அமைதியின்மையும் ஏற்பட வழி வகுக்கும். கடத்தப்படுபவர்கள் குறித்து பொலீஸார் தமக்கு ஏதும் தெரியாது என்று கூறுகிறார்கள். எனவேஇவ்வாறான சம்பவங்கள் தொடராமல் உரிய நட

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவைத்தில் வேலையின்றி அலையும் இலங்கையர்!

கொழும்பு, பெப். 18

வேலை பெறுவதற்காக குவைத் சென்ற ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் அங்கு வேலையின்றி அலைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் முகவர்களுக்கு விதிக்கும் நிபந்தனைகளை ஏற்க விரும்பாததால் --

குவைத் நாட்டில் வேலை கொள்வோர் அங்கு இலங்கையர்களை வேலையிலிருந்து நீக்கி வருகிறார்களாம்.

இவ்வாறு வேலையிழந்த சுமார் 120 பெண்கள் குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனராம். அவர்களில் பலர் கர்ப்பமுற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தூதரகத்தில் தஞ்சம்புகுந்த பெண்களில் கர்ப்பமுற்ற 14 பேர் கடந்த 6 ஆம் திகதி கொழும்புக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு வேலையற்றிருப்போரில் நோய்வாய்ப்படுவோர் மட்டும் இலங்கை அரசின் செலவில் நாட்டுக்குத் திரும்பி அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-10]

# திருமலையில் இரு தமிழர் படையினரின் சூட்டுக்கு பலி

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முட்டுச்சேனை, வாழைத்தோட்டம், கல்லடி, வெருகல், முகத்துவாரம் கிராமங்களை கடந்த புதன்கிழமை சுற்றிவளைத்த படையினர் அங்கு மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர். பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

முகத்துவாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை திருச்செல்வம், சின்னத்தம்பி குமரேசலிங்கம் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவார்கள்.

இந்தச் சுற்றி வளைப்பின் போது 20 வீடுகளும், இரண்டு கரைவலைவாடிகளும், 3கடைகளும் படையினரால் தீ வைத்து கொளுத்தப்பட்டன என்றும்—

அழிந்து நாசமாகிய உடைமைகளின் பெறுமதி இரண்டு லட்சம் ரூபாவுக்கு மேல் இருக்கும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

[ஒ-3]

# குமணவில் நோயாளர் வருவர்

யாழ்ப்பாணம், பெப். 18

பருத்தித்துறையில் தரித்து நின்ற 'குமண' கப்பலின் மேல் தட்டில் இருந்த பொருள்கள் இறக்கப்பட்டதையடுத்து அக்கப்பல் நேற்று திருமலைக்கு புறப்பட்டுச் சென்றது. கொழும்பு சென்ற நோயாளர்களை ஏற்றிக்கொண்டு மீண்டும் நாளை இக்கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது பருத்தித்துறையில் தரித்துள்ள 'குமாரி' கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் இன்று ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

## வீரமரணம்

வவுனியாவில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளிகளான மங்களா [அப்புத்துரை தேவிகா], கலாநிதி [குலசேகரம் பாலமனோகரி— ஆழியவளை] ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

கடந்த ஜூலை 17 ஆம் திகதி ஆனையிறவில் நடைபெற்ற தாக்குதலில் விழுப்புண் அடைந்து வைத்திய சிகிச்சை பெற்றுவந்த தங்கப்பன் [ஜெரேன்] சுப்புக்குட்டி ரவி — சாவகச்சேரி என்ற போராளி நேற்று வீரமரணம் அடைந்தார்.

[உ-3]

## இராமகிருஷ்ண ஜயந்தி விழா

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நாளை காலை 9 மணிக்கு இராமகிருஷ்ண ஜயந்தி விழா' கல்லூரி அதிபர் திரு. சி. சிவசரவணபவன் தலைமையில் நடைபெறும்.

## சந்திரிக்காவுக்கு புதிய பதவி?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின தென்மாகாண அமைப்பாளர் பதவி சந்திரிக்கா குமாரணதுங்காவுக்கு வழங்கப்படலாம் என்று கட்சியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. அவருக்கு அப்பதவியை வழங்குவதற்கான அடித்தளம் கட்சிக்குள் போடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[உ]

## யோகாசன பயிற்சி

''இருதய நோய், இருதயக் கோளாறு சம்பந்தமான கருத்தரங்கும் அவற்றை குணப்படுத்தும் யோகாசன செய்முறைப் பயிற்சியும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று, எதிர்வரும் 23 ஆம் திகதி [ஞாயிற்றுக்கிழமை] பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யோகாசன நிபுணர்களும், யோகாசனக் கலாநிதி ஸ்ரீ சுவாமி சித்தானந்த சரஸ்வதியும் அக்கருத்தரங்கில் பங்குபற்றி உரை நிகழ்த்துவர்.

யோகாசன செய்முறைகளும் அங்கு செய்து காண்பிக்கப்படும்.

(இ-5)

## செல்லச்சாமி...

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வடிக்கை எடுக்க வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சிறில் ரணதுங்காவிடம் மேற்கண்டவாறு இ. தொ. கா. பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி கேட்டுள்ளார்.

## இம்மாத...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எட்டிவிடும் என்றும் —

அதன் பின்னர் பொருள்களை குடா நாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# 'வீடியோ' படம் திரையிட புதிய விதிமுறை அறிவிப்பு

## வீட்டில் படம் பார்க்க அனுமதி தேவையில்லை

யாழ்ப்பாணம், பெப். 18

ஒருவர் தனது வீட்டில் நிகழும் எந்த நிகழ்ச்சியின் போதும் அல்லது விரும்பும் போதும் வீடியோப் படங்கள் திரையிட எவ்வித அனுமதியும் பெற வேண்டியதில்லை.

ஆனால் விடுதலைப் போரின் பெறுமானத்தையும், புனிதத்தையும் புரிந்து கொண்டு, மூன்றாம் தரத் திரைப் படங்களைத் திரையிட்டு மக்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லாதிருக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வீடியோப் படங்கள் திரையிடுவது தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, பண்பாட்டுக் கழகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

தமிழீழத்தில் இன்று வீட்டுக்கு வீடு 'வீடியோ' படம் பார்ப்பது பெருகியுள்ளது. மக்களின் உணர்வுகளையும் அவரவர் இரசனைக்கேற்ற கலை வடிவங்களைப் பார்ப்பதையும், ரசிப்பதையும் நாங்கள் கட்டுப்படுத்தவில்லை.

ஆனால் நிதியுதவிக் காட்சியாகத் திரையிடப்படும் திரைப்படங்களுக்கான அனுமதியை மட்டும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக பிரிவுச் செயலகங்களிலும், மாவட்டச் செயலங்களிலும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது தவிர வீட்டிலே அல்லது பொது இடங்களிலோ வருமானம் கருதி தினசரி சிறிய அரங்கம் போன்று 'வீடியோ' திரைப்படம் திரையிடுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

கூட்டாகவோ அல்லது தினசரி ஓரிடத்திலேயோ, குழுமி பணவருவாயை மாத்திரம் கருத்தில் கொண்டு 'வீடியோ' திரைப்படம் திரையிடுபவர் தண்டனைக்குரிய குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவதுடன் திரைப்படம் காட்டுவதற்குரிய சாதனங்களும் பறிமுதல் செய்யப்படும் — என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[த]

### காவிரி நீர்ப்பிரச்சினை:

# புதுடில்லிப் பேச்சுகள் தோல்வியில் முடிந்தன

புதுடில்லி, பெப். 18

காவிரிநீர்த்தகராறு பற்றிய புதுடில்லிப் பேச்சுகள் நேற்று பிரயோசன மற்றதாக முடிவடைந்தன.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, நேற்று மாலை புதுடில்லியில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து கர்நாடகம், தமிழகம், புதுச்சேரி, கேரள மாநில முதலமைச்சர்கள் கூட்டாக நேற்று மாலை பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் அது குறித்து தமது ஏமாற்றத்தை செய்தியாளர்களிடம் ஜெயலலிதா வெளியிட்டார்.

இனியும் இது போன்ற பேச்சுவார்த்தை நடப்பதற்கான வாய்ப்பே இல்லை என்றார் அவர்.

இதற்கிடையில்—

காவிரி நீர்ப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புதுடில்லிப் பேச்சு நல்லதொரு ஆரம்பம் என்று கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பா தெரிவித்தார்.

(உ-எ)

# போபர்ஸ் பீரங்கி ஊழல் ராஜீவ் கமிஷன் பெற்றார்

## அம்பலப்படுத்துகிறார் அதிகாரி

போபர்ஸ் பீரங்கிகளை இந்தியா கொள்வனவு செய்வதற்காக அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் சில இந்திரா காங்கிரஸ் தலைவர்களுக்கு ''கமிஷன்'' பணம் வழங்கப்பட்டது.

போபர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த— தமது பெயரை வெளியிட விரும்பாத— நிறைவேற்று அதிகாரி ஒருவர் சுவிடிஷ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

ராஜீவுக்கு கமிஷன் வழங்கப்பட்டது பற்றி அந்நிறுவன உயரதிகாரி ஒருவர் அறிவித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

லண்டன் நிறுவனம் ஒன்றினால் சுவிஸ் வங்கி ஒன்றில் ஆரம்பிக்கப்பட்ட பலகணக்குகள் மூலம் 3 கோடி 20 லட்சம் பவுண்கள் கமிஷனாகச் செலுத்தப்பட்டது என்றார் அந்த அதிகாரி.

[உ-எ]

# பல கோடீஸ்வரர்களின் மோசடி அம்பலத்துக்கு!

கொழும்பு, பெப். 18

ஆடைகளைத் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களான பல கோடீஸ்வரர்கள் மீது வழக்குத் தொடர இலங்கை சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சுமார் 42 கோடி 50 லட்சம் ரூபா சுங்க வரியைச் செலுத்தாமல் மோசடி செய்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்படவிருக்கிறதாம்.

ஆடைகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வழங்கப்பட்ட வரிச் சலுகையைப் பயன்படுத்தி, இவர்கள் துணி வகைகளைப் பெருமளவில் இறக்குமதி செய்து, உள்ளூரில் விற்பனை செய்ததாகக் கூறப்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக 101 ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகள் சுங்க அதிகாரிகளின் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் —

இவற்றில் அனேகமாக எல்லாத் தொழிற்சாலைகளிலும் வரிச்சலுகைகளைப் பயன்படுத்தி மோசடி வேலைகள் இடம்பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இவற்றுள் சந்தேகத்துக்கிடமான 21 பெரிய தொழிற்சாலைகளை சுங்கப் பகுதியினர் மூடி ''சீல்'' வைத்து தொடர்ந்து சோதனையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[உ-10]

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சுந்தரம்

நாரந்தனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுந்தரம் அவர்கள் 17-02-92 இல் சிவபதமடைந்துவிட்டார். இவர் முன்னைநாள் ''கங்கா ஸ்ரோர்ஸ்'' தெகிவளை உரிமையாளரும், மனோன்மணியின் அன்புக் கணவரும், செல்வி வசந்திமாலாவின் [ஆசிரியர் நாரந்தனை கணேச வித்தியாசாலை, ஊர்காவற்றுறை] அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற க. முருகேசு [கங்கா ஸ்ரோர்ஸ் தெகிவளை], க. நல்லையா, க. சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதிகள் சண்முகம் நகுலாம்பிகை, சண்முகராஜா பொன்மணி [ஓய்வுபெற்ற ஆசிரியை சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்], சொக்கலிங்கம் பராசக்தி திரு. நா. திருச்செல்வம் [உப அதிபர் O. L. R. யாழ்ப்பாணம்) திருமதிகள் சபாரெத்தினம் தங்கலெட்சுமி, தம்பையா சிந்தாமணி, குமாரசாமி மங்கையற்கரசி, திரு நா. கிருஷ்ணபாலா [ஆசிரியர் றோ. க. வித்தியாலயம் நாவாந்துறை] திருமதி சண்முகராசா சகுந்தலா தேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஆனைப்பந்தி இல்லத்தில் 18-02-92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று. பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

122/10B 4 ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

தகவல்:
மனைவி, மகள்
நா. திருச்செல்வம்
[மைத்துனர்]

[19769]

## திருமதி மரியம்மா பர்னாந்து

மண்டைதீவைச் சேர்ந்த திருமதி மரியம்மா பர்னாந்து காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பர்னாந்து [ஊசோன்] என்பவரின் அன்பு மனைவியும் யேசுதாசன் [கிளை முகாமையாளர் வேலணை ப. நோ. கூ. சங்கம்] காலஞ்சென்ற அன்ரன், றஞ்சிதம் ஆகியோரின் அன்புத் தாயும், சந்தியாப்பிள்ளை றீற்றம்மா, ராசாத்தி ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி யோண் கியோமார் லைலா, சுகி ஆகியோரின் வளர்ப்புத் தாயும், மாகிறேற் காலஞ்சென்ற கற்கண்டு திரேசம்மா, காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யசோ, டண்சன், ரமேஷ், சுரேஷ், றொசானி, றொகானி, றொமானி, அமல்ராஜ், சங்கீதா, சபேஸ், சரித்தா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 18-02-92 இன்று மு. ப. 10 மணிக்கு இல. 111/9 மவுண்காமல் வீதி ஒழுங்கையிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக பரி. கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. யேசுதாசன்
மகன்

[19772]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org